# தமிழோடு நாம்

**தமிழா(ல்) உயர்வோம், தமிழை உயர்த்துவோம்**

மே 2026 | தனிச்சுற்றுக்கு மட்டும் | சுய முன்னேற்ற மாத மின்னிதழ் 14



## யாண்டும் கல்!

## இந்த வருடம் புதிது!

## பெற்றோர் களம்!

## WAGE WAR WITHIN

TRANSFORMING A READER INTO A LEADER





## BEST OF YOU

TO ATTAIN THE BEST VERSION OF YOU




## THE SECRET OF SMILE

குழந்தை எழுத்தாளரின் படைப்பு




# தமிழோடு நாம்

தமிழா(ல்) உயர்வோம், தமிழை உயர்த்துவோம்

FOR MORE DETAILS +91 75981 68854 / 94893 44144

www.thamizhodunaam.com

# தமிழோடு நாம்

## தமிழா(ல்) உயர்வோம், தமிழை உயர்த்துவோம்

ஆசிரியர்:
முனைவர் த. லாவண்யசோபனா

கௌரவ ஆலோசகர்:
முனைவர் இரா. திருநாவுக்கரசு

ஆசிரியர் குழு:
திருமதி இரா. செமீனா
திருமதி க. பிரீத்தியா

தமிழோடு நாமின் மின்னிதழ்
கட்டுரைகளைச் சுருக்குவதோ. மாற்றுவதோ
ஆசிரியரின் உரிமையாகும்.

தனிச்சுற்றுக்கு மட்டும்

www.thamizhodunaam.com

thamizhodunaam

# தமிழோடு நாம்

## தமிழா(ல்) உயர்வோம், தமிழை உயர்த்துவோம்


| வ.எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 05 |
| 2. | யாண்டும் கல் | 06 |
| 3. | அன்னையர் தினம் | 09 |
| 4. | இந்த வருடம் புதிது | 10 |
| 5. | எனக்காக நான் | 12 |
| 6. | உலக தேனீ நாள் | 14 |
| 7. | தேனீக்களால் உயர்ந்தவர் | 17 |
| 8. | வாழ்க்கை ஒரு பரிசு | 18 |
| 9. | பெற்றோர் களம் | 20 |



# தலையங்கம்!

முனைவர் த. லாவண்யசோபனா

தமிழோடு நாம் வாசகர்களுக்கு
மகிழ்வான வணக்கம்.

சித்திரை மாதம் என்றாலே தமிழ் நாட்டில் பிரசித்தி பற்ற பல கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறும். சித்திரையில் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் கூட்டம் அலைமோதும் பல விழாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று உலகப் புகழ்பெற்றது மதுரை சித்திரைத் திருவிழா. மதுரையில் வளர்ந்த என்னைப் போன்ற பலருக்கும் சித்திரை என்றாலே நினைவுக்கு வருவது கள்ளழகரும், மீனாக்ஷி சொக்கநாதரும் தான். அதிலும் சித்ரா பௌர்ணமி கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்வு பல மதங்களைக் கடந்து அனைத்து மக்களும் ஒன்றாய் கொண்டாடும் ஒருவிழா. அதே போல் மக்கள் கூட்டத்தால் திக்கு முக்காடிக் கொண்டிருக்கிறது திருவண்ணா மலையின் கிரிவலப் பாதை. வயதானவர்களும் இளம் குழந்தைகளும் முடிந்த வரை விடுமுறை நாட்களிலும், விழாக் காலங்களிலும் இத்தகைய கூட்டத்தைத் தவிர்ப்பது சிறந்தது என்னும் அளவிற்கு கூட்டம் அலைமோதுகிறது. நான் ஒரு முறை சித்ரா பௌர்ணமி அன்று கிரி வலம் சென்றிருந்த போது அடுத்த அடி எடுத்து வைப்பதற்கு ஒரு அடி இடத்தைத் தவிர வேறுஇடம் இல்லை. கண்ணுக்கெட்டும் தூரம் வரை தலைகள் மட்டுமே. எப்படி இவ்வளவு தூரத்தைக் கடக்கப் போகிறோம் என்று முதலில் தோன்றினாலும், ஒரு வழியாக கிரிவளத்தை முடித்திரிந்தோம். அடுத்த அடியை மட்டும் கவனித்து நம் பயணத்தைத் தொடர்ந்தால் நம் இலக்கை அடையலாம் என்ற அரிய படத்தை உணர்த்தியது அந்தப் பயணம். நம் இலக்குகளின் உயரத்தைக் கண்டு மனம் கலங்கி பயம் கொள்ளாமல், ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டியதை தினமும் தவறாமல் செய்தால் வெற்றி நிச்சயம்.

தொடங்குதல் முக்கியமல்ல

தொடர்வது தான் முக்கியம்

# யாண்டும் கல்!

நம் தமிழ்!
நம் பெருமை!



**இரா. திருநாவுக்கரசு**
இ.கா.ப.,

வருடம் 1891. மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள மோவ் என்னும் ஊரில் பிறந்த அக்குழந்தைக்கு கல்வி என்பது எட்டாக்கனியாக இருந்தது. அக்காலச் சமூகச் சூழலால் அம்மாணவன் மற்ற மாணவர்களுடன் அமர்ந்து படிக்க அனுமதிக்கப் படவில்லை. வகுப்பறைக்கு வெளியே அமர்ந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டான். தாகம் எடுத்தால் கூட அனைவரும் பயன்படுத்தும் தண்ணீரை குடிக்க அனுமதிக்கவில்லை. யாராவது ஊற்றினால் மட்டுமே குடித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டான், அச்சிறுவன்.



இத்தகைய அவமானங்களைச் சந்தித்தபோதும் "கல்வி ஒன்றுதான் நம்மை உயர்த்தும்" என்ற எண்ணம் அம்மாணவனின் ஆழ்மனதில் பதிந்திருந்தது. நன்கு படித்தார். அவரது விடாமுயற்சியைக் கண்ட பரோடா மன்னர் அவரது மேல்படிப்பிற்கு உதவினார்.

அதன் மூலம் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்திலும், பின்னர் லண்டன் ஸ்கூல் ஆப் எக்கனாமிக்ஸ் போன்ற உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களில் கல்வி கற்று பொருளாதாரத்தில் இரண்டு முனைவர் பட்டங்களைப் பெற்று அக்காலத்தில் மிகச்சிறந்த அறிஞராக விளங்கினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ஒரு புதிய தேசத்தை வழிநடத்த மிகச்சிறந்த அறிவு ஜீவி தேவைப்பட்டபோது உலக நாடுகளின் சட்டங்களை அலசி ஆராய்ந்தறிந்தவராகத் திகழ்ந்தவர்தான் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அத்தகைய சிறப்பின் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தலைமைச் சிற்பியாக உருவெடுத்தார்.

பள்ளியில் ஒரு மூலையில் அமர வைப்பதற்கு மறுக்கப்பட்ட ஒரு மாணவன் தனது கல்வியால் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பதவியேற்றார். அவரது ஒரே ஒரு சொத்து, பிரம்மாண்டமான சொத்து "கல்வியே"யாகும். சங்ககாலத்தில் தலைவனும் தலைவியும் ஒன்றாய் வாழும் இல்லற வாழ்வில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல் உண்டு.



அவ்வாறு பிரிதலில் "ஓதல் பிரிவு" என்பது கற்பதற்காகப் பிரிவதாகும்.

மாணிக்கவாசகர் இயற்றிய "திருக்கோவையார்" என்னும் அற்புதமான அகத்துறை நூலில் கல்வி கற்பதற்காக தலைவியைப் பிரிய எண்ணிய தலைவன், தனது கருத்தினைத் தெரிவிக்கும் பொருட்டு தோழியிடம் கல்வியின் நன்மை குறித்துப் பெரிதும் பாராட்டிக் கூறிய பாடல் இதோ:

சீர் அளவில்லாத் திகழ்தரு
கல்விச் செம் பொன்வரையின்
ஆர் அளவு இல்லா அளவுசென்
றார் அம்பலத்துள் நின்ற
ஓர் அளவு இல்லா ஒருவன்
இருங்கழல் உன்னினர் போல்
ஏர் அளவு இல்லா அளவினர்
ஆகுவர் ஏந்திழையே.

கல்வியானது மேரு மலையைப் போல் அளக்க முடியாத உயர்ந்த தன்மையை உடையது. அக்கல்வியின் எல்லையைக் கண்டவர்கள் திருச்சிற்றம்பலத்தில் நடனம் புரியும் அம்பலவாணப் பெருமானுடைய திருவடிகளை நினைப்பதால் பெறுகின்ற அளவற்ற நன்மைகளைப் பெற்றவராவார் என்பது மாணிக்கவாசகர் இப்பாடலின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.


"யாதானும் நாடாமால் ஊராமால்
என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு." (குறள் எண் – 397)

என்ற திருக்குறளில் நம் தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஒருவன் கற்றுக் கொண்டால் எந்த ஒரு நாடும் சொந்த நாடாகும், எந்த ஊரும் சொந்த ஊராகும். அவ்வாறிருக்க, சாகும் வரை ஒருவன் கல்லாதிருப்பது எதற்காக? என வினாத் தொடுக்கிறார். எனவே, எந்தச் சூழலிலும் கற்பதே சிறப்பாகும்.

கற்பதற்கு வாய்ப்பு கிடைக்கும் போது கற்றுக் கொள்ள வேண்டும். கல்வி என்பது நாம் பெறுகின்ற பட்டயம் (Degree) அல்ல. மாறாக, அது நாம் பெறும் அறிவாகும ;(Wisdom). படிப்பு என்பது நாம் பெறுவது. அறிவு என்பது நாம் அறிந்து கொள்வது புரிந்து கொள்வது தெரிந்து கொள்வதாகவும். கல்வி நல்ல அறிவையும், குணத்தையும் தரும். அது கற்றவரை உயரத்தில் வைக்கும்.

மாணிக்கவாசகரின் பாடலுக்கு விளக்கமாக "கல்லாடம்" என்னும் நூலில் கல்வியின் சிறப்பு குறித்து ஒரு முப்பத்திரண்டு வரி பாடல் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

"நிலையினில் சலியா நிலைமை யானும்..." எனத் தொடங்கும் அப்பாடல்,



கல்வியானது மேரு மலைக்கு ஒப்ப உயர்வானது மற்றும் நிலையானது. கடலைப் போன்று பரந்து விரிந்தது. மும்மூர்த்திகளைப் போல் கல்வியானது மானுடத்தை உயர்த்தவும், அழிவிலிருந்து காத்தும், வாழ்வின் உண்மைப் பொருளை விளக்கும் தன்மை கொண்டது. கற்பக மரங்களைப் போல் வேண்டியவற்றைத் தரும் சிறப்பு கொண்டது. கண்களைப் போன்றது திருவருளைத் தருவது இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியைப் பயில்வதால் இறைவனது திருவடியின் அன்பு கிடைக்கும் என்று விளக்கி அத்தகைய அன்பு வைத்தோர் அனைத்து நலங்களையும், சிறப்புகளையும் பெற்று நெடிது வாழ்வர் என்று விளக்கி அதனடியில் மதுரை பாணபத்திரரின் சிறப்பையும் கூறி முடித்திருக்கிறது அப்பாடல்.

மதுரை மண்ணில் வாழ்ந்து இறைவனை இசையால் வழிபட்டவர் பாணபத்திரர் ஆவார். அவருக்குப் பெரும்பொருள் கொடுத்து உதவுவதற்காக விரும்பிய சிவபெருமான் அவரது கனவிலே தோன்றி, சேரமான் நம்மிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். அவருக்கு நான் ஒரு கடிதம் தருகிறேன் என்று கூறி “மதிமலி புரிசை“ எனத் தொடங்கும் திருப்பாசுரத்தை தந்தருளினார். பாணபத்திரரும் அதனைச் சேரமானுடைய அரண்மனைக்கு எடுத்துச் சென்றார். அக்கடிதத்தைக் கண்டதும் சேரமான் ஆனந்தக் கூத்தாடி வேண்டிய பொருட்களையெல்லாம் யானை மீது ஏற்றி அனுப்பினார். கல்வியில் சிறந்து, இறைவனருள் கிடைக்கப் பெற்றவருக்கு வேண்டிய அனைத்தும் கிடைக்கும் என்பதற்கு இக்கதை ஓர் எடுத்துக்காட்டாகும்.

”கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே” என்ற பெருமை கொண்ட தமிழ் நூல் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வியின் சிறப்பை வெகுவாகப் பாராட்டியிருப்பது ஓர் அறிவார்ந்த சமூகத்தின் மீது நம் தமிழ் கொண்டிருந்த பற்றுதலை வெளிப்படுத்துகிறது. கல்வியின் சிறப்பை காலமெல்லாம் போற்றும் நம் தமிழ்! நம் பெருமை தானே!



ஊனுருக்கி உதிரம் சிந்தி,
உணவளித்து உயிர் கொடுத்து,
உளமகிழ்ந்து உணர்வூட்டி
உயிர் பிரிந்தாலும் சேய் காக்கும்

**உலகின் உறவுகளிளெல்லாம் உயர்வானாள் அன்னை**

முனைவர். த.லாவண்யசோபனா

# 12 ஆம் வகுப்பிற்குப் பிறகு கம்ப்யூட்டர் சார்ந்த பொறியியல் படிப்புகள்!

## இந்த வருடம் புதிது!

**லக்ஷ்மி வெங்கட்ராமன்**

வாழ்வியல் பயிற்சியாளர் மற்றும் கணித ஆசிரியர்






இன்றைய உலகம் முழுவதும் டிஜிட்டல் மாற்றம் வேகமாக நடைபெற்று வருகிறது. வங்கி, மருத்துவம், கல்வி, பொழுதுபோக்கு எல்லா துறைகளிலும் கணினி மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு அதிகரித்து வருகிறது.

அதனால், 12ஆம் வகுப்பு முடித்த பிறகு மாணவர்கள் தேர்வு செய்யும் பொறியியல் படிப்புகளில், கம்ப்யூட்டர் சார்ந்த பாடப்பிரிவுகள் மிகவும் முக்கியமான மற்றும் எதிர்காலத்துக்கு ஏற்ற தேர்வாக மாறிவிட்டன.

இந்தத் துறையில் வாய்ப்புகள் அதிகம் இருந்தாலும், சரியான பாடப்பிரிவைத் தேர்வு செய்வதும், அதற்கேற்ற திறன்களை வளர்த்துக்கொள்வதும் மிகவும் அவசியம்.
முக்கிய கம்ப்யூட்டர் பொறியியல் பாடப்பிரிவுகள்:
- Computer Science Engineering (CSE)
- Information Technology (IT)
- Computer Engineering

இந்தப் பாடப்பிரிவுகள் Programming> Software Development> Database> System Design போன்ற அடிப்படைகளை கற்றுக்கொடுக்கின்றன.
சிறப்பு படிப்புகள்:
இன்றைய காலத்தில், கம்ப்யூட்டர் துறையில் பல புதிய சிறப்பு பாடப்பிரிவுகள் உருவாகி வருகின்றன:
- Artificial Intelligence & Machine Learning (AI & ML)
- Data Science & Data Engineering
- Cybersecurity / Information Security
- Cloud Computing & DevOps
- Blockchain Technology
- Internet of Things (IoT)

இந்தத் துறைகள் மிகவும் அதிக சம்பளம் மற்றும் உலகளாவிய வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன.

Software & Development சார்ந்த துறைகள்
Software உருவாக்கம், App Development> Website Development போன்றவற்றில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கான துறைகள்.
- Software Engineering
- Full Stack Development
- Web Development / App Development

இந்தத் துறைகளில், மாணவர்கள் கல்லூரி படிக்கும் போது கூட Internship அல்லது Freelancing மூலம் சம்பாதிக்க முடியும்.

எதிர்கால தொழில்நுட்ப துறைகள்: இவை இன்னும் வளர்ந்து வரும் மற்றும் அதிக வாய்ப்பு உள்ள துறைகள்:
- Robotics (AI இணைந்து)

- Human-Computer Interaction (HCI)
- Augmented Reality (AR) / Virtual Reality (VR)
- Game Development Engineering

Gaming > Simulation > UX Design போன்ற துறைகளில் அதிக வளர்ச்சி உள்ளது.

இணைந்த துறைகள்: (Computer + மற்ற துறைகள்)

கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் மற்ற துறைகளுடன் இணைந்து புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது:
- Bioinformatics / Computational Biology
- FinTech (Finance + Technology)
- HealthTech / Medical Informatics
- Geoinformatics

Technology + Interest இணைக்க விரும்பும் மாணவர்களுக்கு இது சிறந்த தேர்வு.

சரியான பாடப்பிரிவை எப்படித் தேர்வு செய்வது?

மாணவர்கள் தங்கள் ஆர்வத்தின் அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும்:
- Coding பிடித்தால் →CSE / AI / Data Science
- Security/ forensic மீது ஆர்வம் இருந்தால் → Cybersecurity
- Business + Data மீது ஆர்வம் இருந்தால் → Data Science / FinTech
- Creativity + Technology பிடித்தால் → Game Development / AR-VR/UIUX
- பாடப்பிரிவு மட்டும் போதாது - திறன்கள் மிகவும் முக்கியம்
- மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டியது:
  - Coding practice
  - Real-time projects
  - Internships

கம்ப்யூட்டர் சார்ந்த பொறியியல் படிப்புகள் இன்று மட்டுமல்ல, எதிர்காலத்திலும் மிகுந்த முக்கியத்துவம்பெறும் துறையாக இருக்கும். ஆனால், திறன்கள், பயிற்சி, மற்றும் தொடர்ந்து கற்றுக்கொள்ளும் மனப்பான்மை முக்கியம்.

மாணவர்கள் தங்கள் ஆர்வம் மற்றும் திறனைப் புரிந்து கொண்டு சரியான துறையை தேர்வு செய்தால், இந்த துறையில் மிகச்சிறந்த வளர்ச்சியையும், உலகளாவிய வாய்ப்புகளையும் பெற முடியும்.

“படிப்பை மட்டும் படிக்காமல், அதைப் பயன்படுத்த கற்றுக்கொள்வதே உண்மையான வெற்றி.”

# எனக்காக நான்!

## Self - Care

**கவிதாலட்சுமி கோபாலகிருஷ்ணன்**
மனநல ஆலோசகர்



குறள் :
"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை
வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த்
தற்று."

விளக்கம் :
அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் மற்றும் வாழ்க்கை வளமற்ற பாலைவனத்தில் பட்டமரம் தளிர்த்தார் போன்றது.

சுய பராமரிப்பு - "தன்னைத் தானே கவனித்துக் கொள்வது ஒரு அவசியமான கலை. உங்களுக்காக நீங்களே செய்யும் மிக முக்கியமான முதலீடு."

Self-Care என்பது சுயநலம் அல்ல, அது தன்னம்பிக்கையின் அடிப்படை.

இன்றைய அவசரமான உலகில் நாம் அனைவரும் ஒரு நிறுத்தமில்லாத ஓட்டத்தில் இருக்கிறோம், காலை முதல் மாலை வரை ஓயாத வேலை, ஓட்டம், வேகம், குடும்பம், அலுவலகம் இதற்கு மத்தியில் நாம் பயன்படுத்தும் நேரத்தை செல்பேசியும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ஆனால் இந்த நெடிய பட்டியலில் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது என்பதை நாம் மறந்து விடுகிறோம் அது என்னவென்றால், "நம்மை நாமே கவனித்துக் கொள்வது."

சுய பராமரிப்பு என்பது வெறும் Spa செல்வதோ, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி ஆடம்பரமாக வாழ்வதோ இல்லை. அது உங்கள் உடல் (Body), மனம் (Mind), உணர்வு (Feelings) மற்றும் ஆத்மார்த்தமான (Soulful) ஆகிய பரிமாணங்களில் கவனிக்கப்பட வேண்டும்.

சுய பராமரிப்பு என்பது :

1) நீங்கள் உங்களை அறிந்து கொள்வது (Self Analysis)

2) உங்களுக்கான நேரத்தை ஒதுக்குவது (Self Time)

3) உங்கள் எல்லைகளை அமைத்துக் கொள்வது (Self Boundaries)

4) உங்களுக்கு பிடித்த விஷயங்களில் ஈடுபடுவது (Self Interest)

5) உங்களை நீங்களே மதிப்பிடுவது (Self Evaluation)

6) உங்களை நீங்களே நேசிப்பது (Self Love)

சுய பராமரிப்பின் அம்சங்கள்:

1) உடல் ஆரோக்கியம் : சில உடல் உபாதைகளை குறைக்க உதவுகிறது.

2) மன ஆரோக்கியம் : மனச்சோர்வு (Depression)> பதட்டம் (Anxiety) இவைகளை நீக்கும்.

3) உறவுகள் : உங்களை முழுமையாக கவனித்துக் கொண்டால் உறவுகள் மேம்படும்.

4) உற்பத்தித் திறன் : ஓய்வெடுத்து வேலையைச் செய்யும் போது அது மூளையை புத்துணர்வடையச் செய்யும். அதனால் படைப்பாற்றலுடன் (Innovative) வேலை செய்ய முடியும்.

சுய பராமரிப்பு தொடங்குவது எப்படி? ஒண்ணுமே இல்லைங்க. சிறு சிறு செயல்களைச் செய்யுங்க:

1) தினமும் நன்றி (Gratitude) சொல்லுங்கள்.

2) ஒரு நாளாவது சோசியல் மீடியா இல்லாமல் இருங்கள்.

3) தினமும் 10 நிமிடம் உங்களுக்கான நேரம் (ME TIME) என ஒதுக்குங்கள்.

4) நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள்.

5) TV> Phone பார்க்காமல் உணவை கவனத்துடன் சாப்பிடுங்கள்.

6) இல்லை "NO" என்ற ஒரு விஷயத்தை தேவையான இடங்களில் சொல்லிப் பாருங்கள்.

7) சுய பராமரிப்பு (Self-Care Routine) என்பதை எழுதி வைத்துக்கொண்டு அதைப் பின்பற்றுங்கள்.

பெரும்பாலான பெண்கள் எப்போதும் மற்றவர்களை முன்னிறுத்தி வாழ்கிறார்கள். அம்மா, மகள், மனைவி, மருமகள் என்று பல பாத்திரங்களைச் சுமந்து கொண்டு தன்னை கவனிக்கத் தவறி விடுகிறார்கள். உங்களுக்கான நேரம் ஒதுக்குவது சுயநலம் அல்ல உங்கள் கனவுகளும் தேவைகளும் ஆசைகளும் முக்கியமானவை.

"சுவர் இருந்தால்தான் சித்திரம்" என்பது போல நீங்கள் உடல் ஆரோக்கியத் துடனும் மன ஆரோக்கியத்துடனும் இருந்தால் உங்களைச் சுற்றி உள்ளவர்களும் பயனடைவார்கள். சுய பராமரிப்பை வாழ்க்கை முறையாக் கினால் உங்களை நீங்களே நேசிப்பீர்கள், உங்களை மதிப்பீர்கள், அதனால் வாழ்க்கையை அழகாக்கி முன்னோக்கிக் கொண்டு செல்வீர்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவீர்கள்.

"உன்னை நீயே நேசி. அதுவே, மற்ற அனைத்திற்கும் அடித்தளம்."



# உலக தேனீ நாள்

உலக தேனீ நாள் அல்லது உலக அளி நாள் (World Bee Day) ஒவ்வொரு ஆண்டும் மே 20 அன்று கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் தான் தேனீ வளர்ப்பின் முன்னோடியான அன்டன் ஜானியா 1734இல் பிறந்தார். அளிகள் என்பவை பல்வேறு வகையான வண்டுகள். அவற்றில் ஒரு இனம் தான் தேனீ ஆகும்.

சுற்றுச் சூழலில் தேனீக்களின் பங்களிப்பினைப் பாராட்டுவதோடு மகரந்தச் சேர்க்கையில் தேனீக்களின், மற்றும் அளி இனங்களின் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இவ்வுலகில் உருவாக்கத்தின் அடித்தளமாக இனப்பெருக்கத்தின் காரணியாக இருப்பது தேனீக்களே.

தேன் சேகரிக்கும் போது மகரந்தச்சேர்க்கையினை நிகழ்த்தி காய்கள், பழங்கள் என நமக்கு உணவளிக்கும் உயரிய பணியைச் செய்பவை தேனிக்களே. அதிக காற்று மாசுள்ள இடங்களில் இவை வளர்வதில்லை. அதனால் தேனீக்கள் காற்று மாசுபாட்டை உணர்த்தும் உயிர் குறியீடாகவும் (bio indicators) செயல்படுகிறது. அத்தகைய தேனீக்களை வளர்ப்பது நம் சுற்றுச் சூழலை மேம்படுத்தும்.

யானைகள் மற்றும் தேனீக்கள் திட்டம்: தேனீக்கள் மீது யானைகளின் இயல்பான பயத்தைப் பயன்படுத்தி, யானைகளின் தாக்குதலில் இருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க 'யானைகள் மற்றும் தேனீக்கள் திட்டம்'

(Elephants and Bees Project) லூசி கிங் என்பவரால் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது. தேன்கூடு வேலிகள் என்பவை பத்து மீட்டர் இடைவெளியில் கம்பிகளால் இணைக்கப்பட்ட தேன்கூடுகள் அல்லது போலித் தேன்கூடுகளால் ஆனவை. ஒரு யானை தேன்கூட்டையோ அல்லது கம்பியையோ தொடும்போது, தேன்கூடு ஆடத் தொடங்குகிறது. இதனால் தேனீக்கள் கோபமுற்று, அவை கூட்டை விட்டு வெளியேறி யானைகளைத் தாக்குவதால், யானைகளும் பயந்து ஓடுகின்றன. யானையின் உடலின் பெரும்பகுதி தடித்த தோலால் மூடப்பட்டிருப்பதாலும், தேனீக்கள் யானையின் கண்கள் மற்றும் வாய் போன்ற அதிக உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் தாக்குகின்றன.

பல கிராமப்புறங்களில் யானைகள் பயிர்களைச் சூறையாடுவதாலும் அழிப்பதாலும், அவை மிகப்பெரும் அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன. இந்நிலையில், மனித-யானை மோதலைக் குறைக்கும் நோக்கில் இது போன்ற புதுமையான தீர்வுகளை உருவாக்குவது மிகவும் அவசியமாகிறது. இச்செயல்பாடு யானைகளின் பாதுகாப்பிற்கு உதவுவதோடு, மோதல்களையும் குறைக்கிறது. அதுமட்டுமின்றி, இது இயற்கைச் சூழலுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் ஏராளமான நன்மைகளையும் வழங்குகிறது. அப்பகுதியில் தேனீக்களின் எண்ணிக்கையும் இருப்பும் அதிகரிப்பதால், மகரந்தச் சேர்க்கை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிகப் பயிர் விளைச்சல் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், யானைகளால் பயிர்கள் தாக்கப்படுவதும் சேதமடைவதும் குறைவதால், இந்த விளைச்சலும் அதன் மூலம் ஒட்டுமொத்த வருமானமும் அதிகரிக்கும். பட்டாசுகள் போன்ற மனித-யானை மோதலைக் குறைப்பதற்கான பிற முறைகள் இரு தரப்பிலும் காயத்தையும் உயிரிழப்பையும் ஏற்படுத்தக்கூடும். ஏனெனில், இதற்குப் பதிலடியாக யானை ஆக்ரோஷமாக மாறக்கூடும், இது பதிலடி கொடுக்கவும் தூண்டலாம். எனவே, தேனீக்கள் மீதான இந்த இயற்கையான பயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மனிதர்களின் நேரடித் தலையீட்டை நீக்கும் இந்த முறையானது, மற்ற தடுப்பு முறைகளால் பயிர்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்தையும், மனிதர்கள் மற்றும் யானைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் குறைக்கிறது.

இந்த முறை ஆப்பிரிக்கா முழுவதும் செயல்படுத்தப்பட்டு, மொசாம்பிக் மற்றும் தான்சானியா போன்ற பல நாடுகளில் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவின் வழியைப் பின்பற்றி, தேன்கூடு வேலிகள் ஆசியா முழுவதும் சோதனை செய்யப்பட்டு அமைக்கப்படுகின்றன.



தென்னிந்தியாவின் உத்தர கன்னடா போன்ற பகுதிகளில், உள்ளூர் மனித-யானை மோதலைக் குறைப்பதற்காக, வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் (WRCS) ஆராய்ச்சி இயக்குநரான பிராச்சி மேத்தா, தேன்கூடு வேலிகளின் சற்றே மாறுபட்ட வடிவத்தைச் செயல்படுத்தியுள்ளார். மேற்கூறிய தேன்கூடுகளைப் . போலவே, உள்ளீடற்ற மரக்கட்டைகள் பத்து மீட்டர் இடைவெளியில் ஒரு இணைப்பு கம்பியால் கோர்க்கப்பட்டு, தேனீக்களை ஈர்ப்பதற்காக சர்க்கரை, இலவங்கப்பட்டை மற்றும் தேன்மெழுகு கலவையைக் கொண்ட துளைகள் இரு முனைகளிலும் இடப்பட்டுள்ளன.

இந்தத் தேன்கூடு வேலிகள் யானைகளின் தாக்குதல்களைக் கணிசமாகக் குறைத்துள்ளதால் உள்ளூர் விவசாயிகள் பலர் இந்த முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

# தேனீக்களால் உயர்ந்தவர்!


சலீமா

தேனி மாவட்டம் கொடுவிலார்பட்டி கிராமம் உட்கடைபள்ளப்பட்டி என்ற குக்கிராமத்தில் திருமதி. சலீமா மற்றும் அவரது கணவர் திரு செயித் முகம்மத் என்ற விவசாய தம்பதியர் விவசாயம் செய்துவருகின்றார்கள். இவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் சுமார் 1000 தென்னை மரங்கள் உள்ளது. 2006-ம் ஆண்டு தேங்காய் ஒன்று 5 ரூபாய்க்கு விலைபோனது.

இது தென்னைமரங்களுக்கு பராமரிப்புக்கே போதுமானதாக இல்லை, விவசாயிகளால் விலை நிர்ணயம் செய்ய இயலாது எனவே தென்னை மரங்களை வெட்டிவிடலாம் என்று எண்ணியபோது இச்சூழலில் மகசூலை அதிகப்படுத்த எடுத்த முயற்சியில் ஒன்றுதான் தேனி வளர்ப்பு.
தென்னையில் தேனி வளர்ப்பு செய்தால் 20 - 30% அதிக காய்கள் கிடைக்கும் என்பதை அறிந்து 2006-ல் 10 தேனி பெட்டிகள் எங்கள் தோப்பில் நிறுவிய பின்பு தேங்காய் மகசூல் கூடியது,

அதோடு தேனும் கிடைத்தது. இதைத்தொடர்ந்து மேலும் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரித்துத் தேன் சேகரித்து விற்பனை செய்துவருகிறார்கள். தேனீக்களின் வளர்ப்பில் பல விருதுகளைப் பெற்ற இவர் தேனீ வளர்ப்பில் 2023 ம் ஆண்டிற்கான தேசிய விருதைப் பெற்றுள்ளார். இவர்களிடம் முருங்கைத்தேன், முந்திரிதேன், நாவல்தேன்என 12 வகையான தேன்கள் உள்ளன. தேனின் துணைப் பொருட்களாக தேன்மெழுகு, தேன்மகரந்தம், ராயல்ஜெல்லி போன்ற பொருட்களும் உள்ளன.

“தேனீக்கள் உலகில் இல்லையெனில் நான்கு ஆண்டுகளில் வேளாணுற்பத்தி குறைந்து மனித இனம் அழிந்துவிடும்”
–ஆல்பர்ட்ஜன்ஸ்டீன்”

தேனீக்களால் மட்டுமே மனிதஇனம் இருக்கிறது எனவே நாம் உயிர் வாழ தேனீக்கள் வேண்டும். தேன் என்ற பொருளால் சுமார் 180க்கும் மேற்பட்ட சத்துக்களைக் கொண்ட உணவு கிடைக்கிறது. தேன் தொடர்ந்து உட்கொண்டால் சத்துப்பற்றாக் குறையால் ஏற்படும் நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது என்று தேனீக்களின் மகத்துவத்தை சலீமா எடுத்துரைக்கிறார்.

## படிப்போம் பரிணமிப்போம்!
## வாழ்க்கை ஒரு பரிசு

ஈர்ப்பு விதி மற்றும் நேர்மறை சிந்தனை பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன அந்த வரிசையில் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒரு நூல் " வாழ்க்கை ஒரு பரிசு". உளவியல் மருத்துவரான கில் எட்வர்ட்ஸ் – ஆல் எழுதப்பெற்ற இந்நூல் 9 பாகங்களைக் கொண்டது.

மகிழ்ச்சி என்பது நமக்குள் இருந்து தான் உருவாக்கப்படுகிறது. வாழ்க்கையை ஒரு பரிசாகக் கருதிவிட்டால் நீங்கள் உங்களைச் சுலபமாக ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்து பலரின் மனதில் உள்ள புலம்பல்களை வெளித்தள்ளும் ஒரு கருவி. நாம் பொதுவாக நல்லது செய்பவர் சொர்கத்துக்குச் செல்வார் என்று சொல்லி வளர்க்கப்பட்டுள்ளோம். அதுவும் இறப்புக்குப் பின் தான் அதுவும் கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். ஆனால் தன்னையும் பிறரையும் இந்த உலகத்தையும் எந்த வித கட்டுப்பாடும் இன்றி நேசித்து, நிலவும் சூழ்நிலைகளை அமைதியாக ஏற்றுக்கொண்டு வாழும் ஒருவர் வாழும் பொழுதே சொர்கத்தை உருவாக்கு கிறார் என்ற கருத்து நம் அனைவரின் மகிழ்ச்சிக்கான திறவுகோல்.




வாழ்க்கை என்பது லட்சியப்பயணம் அல்ல அது ஒரு பரிசு. நாளைய நாளைப் பற்றி கனவு கண்ட படியே இன்றைய தினத்தை நிறைவாக வாழ வேண்டும் என்று பிரபஞ்சத்தோடு ஒன்றி வாழும் ரகசியத்தை எளிமையாய் எடுத்துரைக்கிறது இப்புத்தகம்.

தொலைக்காட்சியில் எதிர்மறையான நிகழ்ச்சியைப் பார்ப்பது, துயரமான நெடுந்தொடர்களைப் பார்த்து மனதில் எதிர்மறை உணர்வுகளால் நிரப்பும் போது உங்கள் வாழ்வில் அதே எதிர்மறை நிகழ்வுகளை உங்கள் வாழ்வில் ஈர்க்கிறீர்கள் என்கிறார் ஆசிரியர்.

நன்றியுணர்வின் முக்கியத்துவமும் இப்புத்தகத்தில் குறிப்பிடப்படுகிறது. தினமும் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் போது நாம் மனநிறைவு கொள்கிறோம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

நேர்மறை எண்ணத்திற்கு எட்வர்ட்ஸ் கூறும் உதாரணம் நம்மைத் தெளிவு படுத்தும். ஒருவர் ஒரு வீட்டை ஏதோ ஒரு காரணத்தினால் விற்க விரும்பினால், அதில் உள்ள குறைகளைப் பற்றி யோசிக்காமல் அதில் உள்ள நிறைகளைப் பற்றி யோசித்தால் அவருடைய எண்ணம் நிறைவேறும் என்கிறார். உணர்வுகளில் அன்பு என்பது உயரிய நிலை. அச்சம் என்பது மிக மோசமான நிலை. எதை நினைத்து பயப்படுகிறோமோ அது நடப்பதற்கான சாத்தியம் அதிகம் என்பதை ஆணித்தரமாய் எடுத்துச் சொல்கிறது இப்புத்தகம். கவனத்தைப் பிரச்சனைகளில் குவிக்காதீர்கள். தீர்வுகளில் குவியுங்கள், மனக்காட்சியமைப்பின் வழிமுறைகள், நேர்மறை உளவியல் என பல உளவியல் கருத்துக்களை உள்ளடக்கிய நூல் இது.

வெகு காலத்திற்கு முன் மலைகளில் வாழ்ந்த ஒரு பெண்மணி ஒரு நீரோடையில் விலை மதிப்புமிக்க கல் ஒன்றைக் கண்டெடுத்தாள், அதை தன் பையில் போட்டாள். அந்த வழியாக வந்த யாசகன் ஒருவன் அதைப் பார்த்து அந்த கல்லை தனக்குத் தருமாறு கெஞ்சினான். ஆனால் அந்த பெண்மணியோ சிறிதும் யோசிக்காமல் அதை அவனிடம் இன்முகத்துடன் தந்தாள். அந்த யாசகனோ மிகுந்த மகிழ்ச்சியுடன் அதை எடுத்துச் சென்றான். அவன் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் கிடைக்காத பணத்தை அது தரும் என்று அவனுக்குத் தெரியும். ஒரு வாரம் கழித்து அவன் மீண்டும் அந்த பெண்மணியைப் பார்க்க வந்தான்.

அன்னையே முதலில் நான் இந்த கல்லை மகிழ்ச்சியாக வாங்கினாலும் , பின்பு என் தூக்கம் பறிபோனது. இந்த கல்லை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.

இதை என்னிடம் சற்றும் யோசிக்காமல் தரச்செய்த அந்த விலைமதிப்பற்ற குணத்தை எனக்குத் தாருங்கள் என்றான். அதற்கு அந்தப் பெண்மணி இந்த பிரபஞ்சம் நாம் எதை முழு நம்பிக்கையுடன் கேட்கிறோமோ அதைத் தருகிறது. நீ என்னிடம் கேட்டாய், நானும் தந்தேன் என்றாள்.

தன்னிகரற்ற அன்பே உயரியது என்பதை இந்த கதை மூலம் விளக்குகிறார் எட்வர்ட்ஸ். இத்தகைய அன்பு சாத்தியமற்றது போலத் தோன்றினாலும், நம்மைச் சார்ந்தவர்களிடமாவது நிபந்தனையற்ற அன்புடன் இருந்தால் நாம் வாழ்க்கையே பரிசாகும்.

# பெற்றோர் களம்!

இந்த மாதம் வெயில் எவ்வளவு கடுமையாக இருக்கிறதோ அதே போல் பத்தாவது, பன்னிரெண்டாவது முடித்த பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு இந்த மாதம் மனதிற்குள் குழப்பமும் கடுமையாகயிருக்கும். பத்தாவது முடித்த பின் எந்தப் பாடப் பிரிவை எடுக்கலாம். எந்த பள்ளி நுழைவுத் தேர்வுக்கு நல்ல பயிற்பயிற்சி தரும், அதில் எவ்வளவு கட்டணம் இருக்கும் என பல கேள்விகள் உங்களைத் தூங்க விடாமல் செய்யும். நீங்கள் சரியான முடிவுகளை எடுக்க பின் வரும் காரணிகளை மனதில் கொள்ளுங்கள்.

நம் பிள்ளை உண்மையில் இந்த படிப்பை படிக்கும் விருப்பத்துடனும், தகுதியுடனும் இருக்கிறானா?

ஏனெனில் சில நேரங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளின் திறன் தெரியாமல் bio-maths குருப்- ல் சேர்ப்பார்கள். பின் சில மாதம் கழித்து பிள்ளையின் கஷ்டத்தைப் பார்த்து மீண்டும் பள்ளி நிர்வாகத்திடம் கெஞ்சி வேறு பிரிவில் சேர்ப்பார்கள். இதனால் மன உளைச்சலும், பணச் செலவும் கூடும். அதனால் ஆரம்பத்திலேயே நன்கு பிள்ளைகளிடம் கலந்தாலோசித்து, மற்றவர்களின் பெருமைக்காக அல்லாமல் உங்கள் புரிதலின் அடிப்படையில் தேர்வு செய்யுங்கள்.




தேவைப்பட்டால் career கவுன்செலிங் எனப்படும் ஆலோசகர்களிடம் கூட உதவியை நாடலாம்.

பள்ளிகளின் தேர்வைப் பொறுத்த வகையில் உங்கள் பொருளாதார நிலைமை தான் எந்த பள்ளி என்பதை நிர்ணயிக்கும் காரணி. உங்கள் மகனோ அல்லது மகளோ நீங்கள் கட்டும் பணத்தின் அருமை அறிந்து ஒழுக்கத்துடன் படிப்பாள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் செலவைப் பற்றி யோசிக்காமல் நிலத்தை விற்று கூட படிக்க வைக்கலாம். NEET> JEE போன்ற படிப்புகளுக்கு ஆறாம் வகுப்பிலிருந்தே பெரு நகரங்களில் உள்ள சில பள்ளிகளில் பயிற்சிகளை ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால் அவர்களுடன் போட்டியிட்டு ஜெயிக்க நல்ல பயிற்சி கட்டாயம் அவசியம்.

பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்களின் பெற்றோருக்கு குழப்பம் இன்னும் அதிகமாகும்.

சரியான வேலைவாய்ப்புள்ள கல்லூரி, காலத்திற்கேற்ற படிப்பு என நீண்டு கொண்டே போகிறது யோசனைகள். இன்று சமூகஊடகங்களில் பலரும் தங்களுக்குத் தெரிந்த கருத்துக்களைச் சொல்லி அவர்கள் பங்கிற்கு குழப்பி விடுகின்றனர். உண்மை என்னவென்றால் எந்த துறையாக இருந்தாலும் நாம் விரும்பி, நம் தனித்தன்மையை நிலை நாட்டினால் வெற்றி நிச்சயம். பரம்பரை விவசாயிகள் விவசாயம் வேண்டாம் என்று ஐடி - க்கு சென்று ஜெயித்ததும் உண்டு.

IT ஐ விட்டு வந்து விவசாயம் செய்பவர்களும் உண்டு. எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் தன் மகன் ஆசைப்பட்டானென்று marine சார்ந்த படிப்பில் பெரும் பொருட்செலவில் சேர்த்தார்கள். அவன் குடும்பத்தின் ஒரே பையன் படித்து முடித்த பிறகு நீண்ட நாள் பணி நிமித்தமாக கடலுக்குள் செல்ல வேண்டும் என்றதும், மகனை அனுப்ப மனமில்லாமல் வேறு ஏதாவது படி என்றனர். தன குடும்பச் சூழ்நிலை அறிந்து முன்பே யோசித்து படித்திருந்தால் பணம் மிச்சமாகியிருக்கும்.

இன்னும் சில பெற்றோரோ தன் பொருளாதார நிலைமையைப் பற்றி யோசிக்காமல் பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்ற கடன்பட்டு படிக்கவைத்து பின் மிகவும் துன்பப்படுகிறார்கள். தனெக்கென சேமிப்பு இல்லாமல் பிள்ளைகளின் படிப்புக்காக மட்டும் மொத்த வருமானத்தையும் செலவு செய்வது சரியான முடிவாக இருக்காது. என் அப்பா நான் படிக்கும் போது ஒரு வார்த்தையை அடிக்கடி சொல்லுவார், நீ தான் உன் கல்லூரி சீட்- ஐ வாங்க வேண்டும், நான் யாரிடமும் அதைச் சென்று கேட்க மாட்டேன். நீ நல்ல மதிப்பெண் எடுத்து சீட் வாங்கினால், படிக்க வைப்பது என் பொறுப்பு என்பார், அதற்காகவே நான் படித்து நல்ல கல்லூரியில் இடம் பிடித்தேன். அவரும் சொற்படி படிக்க வைத்தார். சில புரிதல்களைப் பெற்றோர்கள் படிக்கும் போதே தெளிவு படுத்தி விடுவது அவர்கள் உத்வேகத்துடன் படிப்பதற்கு உதவியாக இருக்கும்.ஒரு வேலை படிப்பதற்கு வாய்ப்பு கேட்டால் இன்னொரு வருடம் அவர்களைப் படிக்கச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். ஆதலால் கல்லூரியில் சேர்க்கும் முன்பு உங்கள் பொருளாதார நிலைமையை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இன்றைய பிள்ளைகள் அவர்களுக்கு பிடித்த படிப்பைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை நாம் கொடுத்தாக வேண்டும். அவர்களின் முடிவு அவர்களாக எடுத்தது, பிறரைப் பார்த்து எடுக்கக்கூடாது என்று பேசிப் புரிய வைக்க வேண்டும். சிலர் விளையாட்டுத் துறை, கலை, இசை என சிறந்து விளங்கும் திறமையுடன் இருந்தால் அதுவும் ஒத்துக்கொள்ளவேண்டிய ஒன்று தான்.

# படிப்போம்,
# புதிதாய்
# பரிணமிப்போம்



## தமிழோடு நாம்

**தமிழா(ல்) உயர்வோம், தமிழை உயர்த்துவோம்**

## உன்னுள் யுத்தம் செய்

சாதனையாளர்களுக்கான
புத்தகம்




## தன்னிலை உயர்த்து

உன்னத வாழ்க்கைக்கான
புத்தகம்




## போட்டித் தேர்வு

தேர்வை எதிர்கொள்ள
15 யுத்திகள்




## காக்கிச்சட்டை அப்பா

தந்தையை
நேசிப்பவர்களுக்காக



## வார்த்தைக்குள் வாழ்க்கை

வார்த்தை
வளமாக



தமிழோடு நாம்

தமிழால்(ல்) உயர்வோம், தமிழை உயர்த்துவோம்

FOR MORE DETAILS +91 75981 68854 / 94893 44144

www.thamizhodunaam.com

முனைவர் இரா. திருநாவுக்கரசு இ. கா. ப.

# போட்டித் தேர்வு

## பதினைந்தும் புதிது



தேர்வினை எழுதும்
அனைவருக்குமான புத்தகம்